கூட்டம் எண்.001/2022

பேர்ணாம்பட்டு நகராட்சி
வேலூர் மாவட்டம்
நாள்.07.04.2022.

சாதாரணக் கூட்டம்

பேர்ணாம்பட்டு நகர் மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11ம் தேதி திங்கட் கிழமை காலை 11.00 மணியளவில் பேர்ணாம்பட்டு நகர் மன்றக் கூட்டத்தில் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் பின்வரும் பொருள்கள் குறித்து தீர்மானிக்கப்பட உள்ளதால் நகர்மனற துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி,
வேலூர் மாவட்டம்

பெறுநர்
நகரமன்ற துணைத் தலைவர் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள்,
பேர்ணாம்பட்டு நகராட்சி.

-----

பொருள் எண்.1

<u>நகர்மன்ற தலைவர் திருமதி.பிரேமா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 12வது வார்டு பாண்டியன் வீதி-1, காமராஜ் நகரில் சிமெண்ட் சாலை, கழிவுநீர் கால்வாய் (ம) கல்வெட்டு அமைத்து தரக் கோருகிறார்.
2. 12வது வார்டு பாண்டியன் வீதி-3 மற்றும் அதனை ஒட்டியுள்ள மூன்று குறுக்கு சந்துகளில் கழிவுநீர் கால்வாய் கட்டிதரக் கோருகிறார்.
3. பாண்டியன் வீதி-3 (அம்மா உணவகம்) கடந்த 2020ம் ஆண்டு புதியதாக சாலை அமைக்க டெண்டர் விடப்பட்டு இதுநாள் வரை சாலை அமைக்கவில்லை. ஆகையால் மேற்படி டெண்டரினை இரத்து செய்து புதியதாக டெண்டர் விட கோருகிறார்.
4. காமராஜ் நகரில் புதியதாக இரண்டு மின்கம்பங்கள், மின்விளக்குகள் மற்றும் சாலை வசதி செய்யக் கோருகிறார்.
5. பேர்ணாம்பட்டு நகரில் உள்ள சமத்துவ மயானத்தில் சவங்களை எரிப்பதால் அக்கம் பக்கம் உள்ளவர்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. ஆகையால் மின்எரிமேடை அமைத்து தரக் கோருகிறார்.

6. காமராஜ் நகரில் உள்ள 7 தெருக்களுக்கு கழிவுநீர் கால்வாய் அமைத்து தரக்கோருகிறார்.

தீர்மானம் எண் : 1

1, 2, 4, 6, 7 மேற்கண்ட பொருள் உள்ள பணிகள் பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை மன்றத்தில் தாக்கல் செய்யவும்.
3. ஒப்பந்ததாரருக்கு இறுதி கடிதம் வைக்கவும்.
5. தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்ததற்கு நன்றி.

பொருள் எண்.2

<u>நகர்மன்ற துணைத் தலைவர் திரு. ஆலியார் ஜீபேர் அஹ்மத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

பேர்ணாம்பட்டு நகரில் அமைந்துள்ள காவல் நிலையம் சுமார் 40 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. தற்சமயம் பழுதடைந்த நிலையில் உள்ளதால் காவல் குடியிருப்பு பகுதியில் புதிய நவீன காவல் நிலையத்தினை அமைக்கவும், பழைய காவல் நிலையத்தினை இடித்து பேருந்து நிலையத்தினை விரிவாக்கம் செய்து தருமாறு நகர் மன்றத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றி மாண்புமிகு தமிழக முதல்வருக்கு வேண்டுகோள் வைக்குமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 2

''அங்கீகரிக்கப்படுகிறது''

பொருள் எண்.3

<u>நகர்மன்ற துணைத் தலைவர் திரு. ஆலியார் ஜீபேர் அஹ்மத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

இந்நகராட்சியின் புத்துக் கோயில் சாலப்பேட்டை வரை மாநில நெடுஞ்சாலைத் துறை மூலமாக இருபுறமும் கழிவுநீர் கால்வாய் அமைத்து தரும்படி கோருகிறார்.

தீர்மானம் எண் : 3

''அங்கீகரிக்கப்படுகிறது''

பொருள் எண்.4

<u>நகர்மன்ற துணைத் தலைவர் திரு. ஆலியார் ஜீபேர் அஹ்மத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. பேர்ணாம்பட்டு நகர பகுதியில் உள்ள 15 எண்ணிக்கை கொண்ட உயர்மின் கோபுர விளக்குகள் பழுதடைந்துள்ளதை உடனடியாக சரி செய்து தருமாறு கோருகிறார்.
2. ஏப்ரல் மாதம் ரம்ஜான் நோன்பு இருப்பதால் வார்டு எண்1, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 19 மற்றும் 21 போன்ற வார்டுகளில் இஸ்லாமியர்கள் அதிகம் வசிப்பதால் தெருக்கள், மசுதிகளை சுத்தம் செய்து பிளிச்சிங் பவுடர், சுண்ணாம்புத் தூள் தெளித்தும் மின்விளக்குகள் சரி செய்தும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்குமாறு கோரியுள்ளார்.

தீர்மானம் எண் : 4

1. திட்ட மதிப்பீடு தயார் செய்து உடனடியாக டெண்டர் விட்டு பிணி செய்ய மன்றம் தீர்மானிக்கப்படுகிறது''

2. ''அங்கீகரிக்கப்படுகிறது''

பொருள் எண்.5

<u>நகர்மன்ற துணைத் தலைவர் திரு. ஆலியார் ஜீபேர் அஹ்மத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

பேர்ணாம்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் நாய் தொல்லை அதிகமாக இருப்பதால், தெருநாய்களை பிடித்து அப்புறப்படுத்துமாறும், மேலும் நகராட்சி பகுதியில் சுற்றித் திரியும் மாடுகளை அப்புறப்படுத்துமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 5

''அங்கீகரிக்கப்படுகிறது''

பொருள் எண்.6

<u>நகர்மன்ற துணைத் தலைவர் திரு. ஆலியார் ஜீபேர் அஹ்மத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

14வது வார்டுக்குட்பட்ட தோப்பு வீதியில் சிமெண்ட் சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைத்து தரும்படி கோருகிறார்.

தீர்மானம் எண் : 6

திட்ட மதிப்பீடு பொறியாளர் தயார் செய்து மன்ற பொருளில் வைக்கவும்.

பொருள் எண்.7

<u>நகர்மன்ற துணைத் தலைவர் திரு. ஆலியார் ஜீபேர் அஹ்மத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

பேர்ணாம்பட்டு நகராட்சிக்குட்பட்ட வி.கோட்டா சாலையில் உள்ள தேசிய நெடுஞ்சாலை (மங்களூர் முதல் வி.கோட்டா வரை) மழைக்காலங்களில் கழிவுநீர் மற்றும் மழைநீர் அதிகமாக தேங்கி நிற்பதால் தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி உள்ள 500 வீடுகளுக்குள் கழிவுநீர் மற்றும் மழைநீர் புகுந்து வருகிறது. தேசிய நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்ட கழிவுநீர் கால்வாய் சரியாக அமைக்கப்படாததால் கழிவுநீர் செல்லாமல் உள்ளது. மேற்படி கால்வாயினை தேசிய நெடுஞ்சாலை மூலம் சரி செய்யும்படி மன்றத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றி தேசிய நெடுஞ்சாலை துறைக்கு கடிதம் அனுப்ப கோருகிறார்.

தீர்மானம் எண் : 7

தேசிய நெடுஞ்சாலை துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கடிதம் தெரியப்படுத்தி பணிகள் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கப்படுகிறது.

பொருள் எண்.8

<u>1வது வார்டு உறுப்பினர் திரு.வை.அதிகுர் ரஹ்மான் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 1வது வார்டுக்கு உட்பட்ட தரைக்காடு மற்றும் குப்பைமேடு பகுதியில் சுமார் 1800 வீடுகள் உள்ளதால், வீடு தோறும் சென்று குப்பைகள் பிரித்து வாங்கும் குப்பை வண்டி 1 மட்டுமே உள்ளதால் குப்பைகளை அகற்ற சிரமமாக உள்ளது. ஆகையால் 4 குப்பை வண்டிகள் ஒதுக்கி தருமாறு கோருகிறார்.
2. 1வது வார்டுக்கு உட்பட்ட தரைக்காடு மற்றும் குப்பைமேடு பகுதியில் சுமார் 1800 வீடுகள் உள்ளது. இதில் 400 வீடுகளுக்கு மட்டுமே குடிநீர் இணைப்பு உள்ளதால் குடிநீர் பிரச்சனைகளை போக்கும் வகையில் நமது நகராட்சியில் உள்ள தண்ணீர் டிராக்டரை நிரந்தரமாக ஒதுக்கி தருமாறு கோருகிறார்.
3. 1வது வார்டுக்குட்பட்ட சின்ன ஈத்காஹ் முதல் தொடங்கி (தரைக்காடு) நகராட்சி பொது சுகாதார கழிப்பிடம் வரையில் சுமார் 700 மீட்டர் நீளமுள்ள சாலையில் குடிநீர் பைப்லைன், கழிவுநீர் கால்வாய் மற்றும் சாலைகளை சீர்படுத்தி தரக் கோருகிறார்.
4. குப்பைமேடு பகுதியில் சுமார்150 மீட்டர் நீளமுள்ள சாலையில் குடிநீர் பைப்லைன், கழிவுநீர் கால்வாய் மற்றும் சாலைகளை சீர்படுத்தி தரக் கோருகிறார்.
5. தரைக்காடு பகுதியில் உள்ள பைப்லைன் இல்லாத சுமார் 5000 மீட்டர் நீளமுள்ள அஜாத் நகர், பிஸ்மில்லா நகர், ஜம்ஜம் நகர், ஹமீத் மஜீத் வீதி, அலிமஸ்ஜீத் வீதி மற்றும் பிலால் நகர் ஆகிய தெருக்களுக்கு குடிநீர் பைப்லைன், கழிவுநீர் கால்வாய் மற்றும் சாலைகளை சீர்படுத்தி தரக் கோருகிறார்.
6. தரைக்காடு பகுதியில் பழுதடைந்துள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியினை புரணமைத்து பழுதடைந்துள்ள பைப்லைன்களை சரிசெய்து தரும்படி கோருகிறார்.
7. தரைக்காடு பொது சுகாதார கழிப்பிடம் அருகில் அமைக்கப்பட்டு பழுதடைந்துள்ள (பொன்னரசன் போர்) ஆழ்துளை போர்வெல்லை ஆழப்படுத்தி சரிசெய்து தருமாறு கோருகிறார்.
8. குப்பைமேடு பகுதியில் பொது சுகாதாரம் மிகவும் அச்சுறுத்தலாக உள்ளதால் ஆட்டு இறைச்சி கூடத்தை எல்.ஆர். நகருக்கு மாற்றம் செய்து தரும்படியும், தற்போது ஆட்டிறைச்சி கூடம் உள்ள இடத்தில் மகப்பேறு மருத்து வசதியுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்து தரும்படி கோருகிறார்.
9. குப்பை மேடு அங்கன்வாடி (மையம் எண். 33605150516) பள்ளி தற்போது வாடகை கட்டிடத்தில் இயங்கி வருவதால், நவாலிஷாப் அருகில் உள்ள சர்வே எண்.478ல் அரசுக்கு சொந்தமான புறம்போக்கு இடத்தில் அங்கன்வாடி பள்ளி கட்டிடத்தை சொந்த கட்டிமாக கட்டி தருமாறு கோருகிறார்.

10. தரைக்காடு அங்கன்வாடி (மையம் எண். 33605150517) பள்ளி தற்போது வாடகை கட்டிடத்தில் இயங்கி வருவதால், நகராட்சி பொது சுகாதார கழிப்பிடம் அருகில் உள்ள அரசுக்கு சொந்தமான புறம்போக்கு இடத்தில் அங்கன்வாடி பள்ளி கட்டிடத்தை சொந்த கட்டிமாக கட்டி தருமாறு கோருகிறார்.
11. குப்பைமேடு மற்றும் தரைக்காடு பகுதியில் இரண்டு உயர் கோபுர மின் விளக்குகள் அமைத்து தரக் கோருகிறார்.
12. தரைக்காடு மற்றும் குப்பைமேடு பகுதியில் அத்தியாவாசியமாக மின்விளக்கு தேவையாக சுமார் 76 மின்கம்பங்கள் உள்ளது. இந்த கம்பங்களில் மின்விளக்குகள் இல்லாததால் இரவு நேரங்களில் விஷஜந்துகள் கடித்தல், நாய் கடித்தல், திருட்டு போன்ற அபாயகர சம்பவங்கள் நடைப்பெறுவதால் போர்கால அடிப்படையில் மின்விளக்குகள் பொறுத்தி தருமாறு கோருகிறார்.
13. 16.05.2018ம் தேதி வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) 99ன் படி தரைக்காடு பகுதியில் தொடங்கப்பட்ட உருது தொடக்கப் பள்ளி சுமார் 4 நான்கு ஆண்டு காலமாகியும் சொந்த கட்டிடம் இல்லாததால் தரைக்காடு பகுதி சர்வே எண்.469ல் உள்ள அரசுக்கு சொந்தமான 23 சென்ட் இடத்தில் நகராட்சி உருது தொடக்கப்பள்ளிக்கு கட்டிடம் கட்டி தருமாறு கோருகிறார்.
14. 1வது வார்டு தரைக்காடு பகுதி (பாபா அமீன் பாய் பக்காத்தி பாரூக் பாய் வீடுகள்) உள்ள இரண்டு தெருவிற்கு கழிவு நீர் கால்வாய் கட்டி தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 8
1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 14 ஆகிய பொருள்களுக்க பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை மன்றத்தில் வைக்க மன்றம் முடிவு செய்கிறது.
12. ‘’அங்கீகரிக்கப்படுகிறது’’
13. வருவாய் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் முடிவு செய்கிறது.

பொருள் எண்.9
<u>2வது வார்டு உறுப்பினர் திருமதி.ஜானகி வில்லியம் பீட்டர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>
1. ஜெ.ஜெ.நகரில் சுமார் 500 குடும்பங்களுக்கு இதுநாள் வரை ஒகேனக்கல் கூட்டு குடிநீர் பைப்லைன் இல்லை. அரசுக்கு சொந்தமாக சுமார் அரை ஏக்கர் நிலம் உள்ளதால், புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து தரக் கோருகிறார்.
2. ஜெ.ஜெ.நகரில் கழிவு நீர் கால்வாய் மற்றும் 4 மின் கம்பங்கள், புதுஷாப் லைனில் 3 மின்கம்பங்கள், திவான் மஜித் வீதியில் 1 மின்கம்பங்கள் அமைத்து தெருமின் விளக்குகள் பொருத்தி தருமாறு கோருகிறார்.
3. திவான் மஜித் தெருவில் 300 குடும்பங்களுக்கு குடிநீர் விநியோக பைப்லைன் இல்லாததால் சுமார் 500 மீட்டருக்கு 3 இன்ச் பைப்லைன் அமைத்து தருமாறு கோருகிறார்.

4. வார்டு எண்.2வது பாத்திமா நகரில் உள்ள டேங்கில் இருந்து திவான் மஜித்திற்கு சுமார் 300 மீட்டர் 3 இன்ச் பைப்லைன் அமைத்து தரக் கோருகிறார்.

தீர்மானம் எண் : 9

1, 2, 3, 4 பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை மன்றத்தில் வைக்கவும்.

பொருள் எண்.10

3வது வார்டு உறுப்பினர் திருமதி.நாகஜோதி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1) 3வது வார்டு எம்.ஜி.ஆர்.நகர் ஏ.பி.முத்து வீதியில் புதியதாக சாலை மற்றும் கழிவுநீர் நீர் கால்வாய் அமைமத்து தருமாறு கோருகிறார்.
2) 3வது வார்டு அம்பேத்கார் வீதியில் புதியதாக சாலை மற்றும் கழிவுநீர் நீர் கால்வாய் அமைமத்து தருமாறு கோருகிறார்.
3) 3வது வார்டு கே.கே.நகர் (முருகன் வீதியில்) புதியதாக சாலை மற்றும் கழிவுநீர் நீர் கால்வாய் அமைமத்து தருமாறு கோருகிறார்.
4) கே.கே. நகரில் உள்ள கழிவு நீர் கால்வாய்கள் பழுதடைந்துள்ளதை சரி செய்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 10

1, 2, 3, 4 பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை மன்றத்தில் வைக்கவும்.

பொருள் எண்.11

4வது வார்டு உறுப்பினர் திருமதி.எஸ்.சுல்தானா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. நகராட்சி பின்புறத்தில் உள்ள காட்டாற்று கால்வாய், முகமதலி வீதி-1, 2 வீதியில் உள்ள காட்டாற்று கால்வாய் பல ஆண்டுகளாக தூர் வாரப்படாத உள்ளதால் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. ஆகையால் போர்க்கால அடிப்படையில் தூர் வருமாறு கோருகிறார்.
2. முகமதலி -2வது வீதியின் குறுக்கு சந்தில் உள்ள சாலை மற்றும் கழிவு நீர் கால்வாய் பழுதுடைந்துள்ளதை அகற்றி புதியதாக கட்டித் தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 11

1, 2, பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை மன்றத்தில் வைக்கவும்.

பொருள் எண்.12

5வது வார்டு உறுப்பினர் திரு. அப்துல் ஹமீத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. 5வது வார்டில் புது வீதி-1, 2. நூர் அகமத் வீதி-1,2 மற்றும் பஜார் வீதி ஆகிய வார்டுகளில் பழுதடைந்துள்ள கழிவுநீர் கால்வாய்களை சரி செய்து தருமாறு கோருகிறார்.
2. புது வீதி-1, குல்ஜார் வீதி-3, ல் பழுதடைந்துள்ள கல்வெட்டினை புதியதாக புதுப்பித்து தருமாறு கோருகிறார்.
3. 21 வார்டு பகுதிகளில் சுற்றித் திரியும் தெரு நாய்களை சுமார் 8 வருடங்களாக பிடித்து அப்புறப்படுத்தாமல் உள்ளதால் பொதுமக்கள், பள்ளி மாணவ மாணவிகள் குழந்தைகள் கடிக்கும் என்று அச்சப்படுவதால் தெருநாய்களை பிடித்து அப்புறப்படுத்த கோருகிறார்.
4. நகராட்சிக்குட்பட்ட நெடுஞ்சாலையில் இருபுறமும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு போக்கு வரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால் அவசரமாக நோயாளிகள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் சென்று வர கால தாமதம் ஏற்படுகிறது. நெடுஞ்சாலையில் துசு மண் அதிக அளவில் உள்ளதால் வாகனங்கள் செல்லும் பொழுது மண் துசு பரந்து பொதுமக்கள் மேல் விழுகிறது. இதனால் மாதம் ஒருமுறை ஆட்களை வைத்து சுத்தம் செய்து தரக் கோருகிறார்.
5. புது வீதி-1, 2 நூர் அகமத் வீதி-1, 2 ஆகிய வீதிகளில் புதியதாக மழைநீர் வடிநீர் கால்வாய் மற்றும் சாலை அமைத்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 12

1, 2, 5 பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை மன்றத்தில் வைக்கவும்.

2. ‘’அங்கீகரிக்கப்படுகிறது’’

3. துப்புரவு ஆய்வாளர் பார்வையிட்டு உடனடியாக சரி செய்யவும்.

பொருள் எண்.13

<u>6வது வார்டு உறுப்பினர் திருமதி.தன்வீராபேகம் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. மதனி வீதியில் குடிநீர் வசதிக்காக பொருத்தப்பட்டிருக்கும் 3 இன்ச் பைப்புகளை அகற்றி சுமார் 200 மீட்டர் நீளத்திற்கு 6 இன்ச் பைப்புகள் பொறுத்தி தருமாறு கோருகிறார்.
2. ஒத்தவாடை லைன் வீதியில் சுமார் 500 மீட்டர் நீளத்திற்கு 6 இன்ச் குடிநீர் பைப்புகளை பொருத்தி 5 இடங்களில் பொது குழாய்கள் அமைத்து தருமாறு கோருகிறார்.
3. 6வது வார்டு பகுதியில் ஆங்காங்கே சேதப்பட்டிருக்கும் கால்வாய் சுவர்களையும் சிமெண்ட் மற்றும் பேவர் பிளாக் சாலைகளையும் பேக்கிங் செய்து தருமாறு கோருகிறார்.
4. பருவ மழைகள் நெருங்கிக் கொண்டிருப்பதால் மீண்டும் குடியிருப்பு பகுதிக்குள் ஆற்று நீர் புகும் அபாயத்தை தடுக்கும் வண்ணம் ஆறாவது வார்டு பகுதியை ஒட்டி இருக்கும் காட்டாறு ஆற்றங்கரையை தூர்வாரி ஆழப்படுத்தி தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 13

1, 2, 3, 4 பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை மன்றத்தில் வைக்கவும்.

பொருள் எண்.14

7வது வார்டு உறுப்பினர் திருமதி.அபுல்ஹசன் ஷாகிராபேகம் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

1. 7வது வார்டில் உள்ள சாலைகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்களை புதியதாக அமைத்து தருமாறு கோருகிறார்.
2. 7வது வார்டு டிப்புசா வீதி மற்றும் லால் மஜீத் வீதியில் சாலை பழுதடைந்துள்ளதால் சாலை அமைத்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 14

1, 2 பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை மன்றத்தில் வைக்கவும்.

பொருள் எண்.15

8வது வார்டு உறுப்பினர் திரு.ஜீ.முஜம்மில் அஹ்மத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

8வது வார்டுக்குட்பட்ட எர்த்தாங்கல் ஹக்கீம் வீதி-2ல் புதியதாக கழிவுநீர் கால்வாய் அமைத்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 15

பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை வைக்கவும்.

பொருள் எண்.16

9வது வார்டு உறுப்பினர் திரு.ஆலியார் சுல்தான் அஹ்மத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

9வது வார்டுக்குட்பட்ட ம.இ.வீதி சந்தில் புதியதாக கல்வெட்டு மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைத்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 16

பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை வைக்கவும்.

பொருள் எண்.17

10வது வார்டு உறுப்பினர் திருமதி.ல. சின்னா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.

சிவராஜ் நகரில் உள்ள கீழ்தெருவில் உள்ள கழிப்பறையில் சுமார் 7 வருடங்களாக தண்ணீர் இல்லாமல் பழுதடைந்து உள்ளதால் பெண்களுக்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. சிவராஜ் நகர் மேற்தெருவிலிருந்து கீழ் தெருவரை பைப்லைன் மற்றும் தொட்டி அமைத்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 17

பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை வைக்கவும்.

பொருள் எண்.18

<u>11வது வார்டு உறுப்பினர் திரு.டி.அப்துல் ஜமில் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 11வது வார்டு ரஹமாதபாத்-1ல் புதியதாக சிமெண்ட சாலை அமைத்து தருமாறு கோருகிறார்.
2. 11வது வார்டு நியாமத் வீதி-2, மற்றும் நியாமத் வீதி-3ல் புதியதாக கழிவு நீர்கால்வாய் அமைத்து தருமாறு கோருகிறார்.
3. 11வது வார்டு ரஹமாதபாத்-1ல் புதியதாக பவர் பிளாக் (அ) சிமெண்ட சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைத்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 18

1, 2, 3 பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை வைக்கவும்.

பொருள் எண்.19

<u>13வது வார்டு உறுப்பினர் திரு.சி.அஹ்மத் பாஷா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

13வது வார்டு இனாம்தார் வீதி மற்றும் சின்ன மஜித் வீதியில் பழுதடைந்துள்ள சாலை மற்றும் கழிவுநீர் கால்வாயினை சரிசெய்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 19

பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை மன்றத்தில் வைக்கவும்.

பொருள் எண்.20

<u>15வது வார்டு உறுப்பினர் திருமதி.நூரேசபா அர்ஷத் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

15வது வார்டில் பெரியமஜித் தெரு, அஜிஜியா வீதி மற்றும் அஜிஜியா வீதி சந்து ஆகிய தெருக்களில் கழிவுநிர் கால்வாய் மற்றும் சிமெண்ட் சாலை அமைத்து தரக் கோருகிறார்.

தீர்மானம் எண் : 20

பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை மன்றத்தில் வைக்கவும்.

பொருள் எண்.21

<u>16வது வார்டு உறுப்பினர் திருமதி.பாரதி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 16 வது வார்டு கெங்கையம்மன் கோவில் வீதிக்கு பின்புறம், மேஸ்திரி வீதி ஆகிய வீதிகளில் சிமெண்ட் சாலை அமைத்து தருமாறு கோருகிறார்.
2. ராமன் வீதியில் புதியதாக ஆழ்துளை கீணறு அமைத்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 21

பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை மன்றத்தில் வைக்கவும்.

பொருள் எண்.22

<u>17வது வார்டு உறுப்பினர் திருமதி.வி.வரலட்சுமி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

17வது வார்டு பகுதியில் சேரன் வீதி-1 கடைசியில் வலது புறமாக உள்ள குறுக்கு தெருவில் முற்றிலும் ரோடு இல்லாததால் குண்டு குழியுமாக உள்ளது. ஆகையால், புதியதாக பேவர்பிளாக் சாலை மற்றும் இருபுறமும் கழிவுநீர் கால்வாய் அமைத்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 22

பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை மன்றத்தில் வைக்கவும்.

பொருள் எண்.23

<u>18வது வார்டு உறுப்பினர் திருமதி.தேன்மொழி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 18வது வார்டு சவுக்ரோடு-7(அம்பேத்கார் நகர்), சவுக்ரோடு-13 மற்றும் ஏரிக்கரை(அருகே) ஆகிய பகுதிகளில் கழிவுநீர் கால்வாய் அமைத்து தருமாறு கோருகிறார்.
2. 18வது வார்டு சவுக்ரோடு-10ல் (ரகு வீடு அருகில்) மின்மோட்டார் பழுதடைந்துள்ள ஆழ்துளை கிணற்றினை சரிசெய்து தருமாறு கோருகிறார்.
3. 18வது வார்டு சாலைப்பேட்டை, சவுக்ரோடு-7, அம்பேத்கார் நகர், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் வீடு அருகில் உள்ள மின்மோட்டார் பழுதடைந்துள்ள ஆழ்துளை கிணற்றினை சரிசெய்து தருமாறு கோருகிறார்.
4. 18வது வார்டு அம்பேத்கார் நகர், சவுக்ரோடு-7, 8, 9 மற்றும் சாலைப்பேட்டை, சவுக்ரோடு-10,11,12,13 மற்றும் சவுக்ரோடு-1,2,3, ஏரிக்கரை புதுமனை ஆகிய தெருகளுக்கு மின்விளக்குகள் அமைத்து தருமாறு கோருகிறார்.
5. 18வது வார்டு அம்பேத்கார் நகர், சவுக்ரோடு-7, 8, 9 மற்றும் சாலைப்பேட்டை, சவுக்ரோடு-10,11,12,13 மற்றும் சவுக்ரோடு-1,2,3, ஏரிக்கரை புதுமனை ஆகிய தெருகளில் பழுதடைந்துள்ள பைப்லைன்களை சரிசெய்து தருமாறு கோருகிறார்.
6. 18வது வார்டு சாலைப்பேட்டையில் ஆம்பூர் சாலையினை ஒட்டியுள்ள நகராட்சிக்கு சொந்தமான கிணறு மழை வெள்ளதால் குமுங்கிவிட்ட நிலையில் உள்ளதால் அருகில் உள்ள ஆபத்தான நிலையிலும், அருகில் உள்ள சாலையின் அகலம் குறைந்துவிட்டதால் கிணற்றினை மூடி தருமாறு கோருகிறார்.
7. 18வது வார்டு சாலைப்பேட்டையில் ஆம்பூர் சாலையினை ஒட்டியுள்ள நகராட்சிக்கு சொந்தமான கிணறு மழை வெள்ளதால் குமுங்கிவிட்ட நிலையில் உள்ளதால் அதன் அருகில் உள்ள ஆழ்துளை கிணற்றின் மின் இணைப்பு, மின் மோட்டார் சுவிட்ச் மற்றும் உதரிபாகங்கள் கழற்றப்பட்டதனை மீண்டும் பொறுத்தி தருமாறு கோருகிறார்.

8. 18வது வார்டு சாலப்பேட்டை, ஏரிக்கரை கீழ் அமைந்துள்ள ஆழ்துளை கிணற்றின் பழுதடைந்துள்ள மின்மோட்டாரினை சரிசெய்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 23

1, 2, 3, 4, 5, 6, 7, 8 ஆகிய பணிகள் குறித்து பொறியாளர் அறிவிக்கை தாக்கல் செய்யவும்.

பொருள் எண்.24

<u>19வது வார்டு உறுப்பினர் திரு.ஆர்.கோவிந்தராஜ் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

19வது வார்டு பாகர் உசேன் வீதி-1, முருகன் கோவில் வீதி மற்றும் பூந்தோட்ட வீதி ஆகிய வீதிகளில் புதியதாக சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைத்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 24

பொறியாளர் அறிவிக்கை மன்றத்தில் வைக்கவும்.

பொருள் எண்.25

<u>20வது வார்டு உறுப்பினர் திருமதி.இந்திராகாந்தி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. ஓங்குப்பம் ரோடு குட்டை புதுமனையில் ஆழ்துளை கிணறு அமைத்து பைப்லைன் அமைத்து தருமாறும் மற்றும் கழிவு நீர்கால்வாய் அமைத்து தருமாறு கோருகிறார்.
2. ஓங்குப்பம் ரோடு அம்பேத்கார் நகரில் கழிவுநீர் கால்வாய் அமைத்து தருமாறு கோருகிறார்.
3. பேர்ணாம்பட்டு நகரில் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பெயர் சூட்டிய பேரறிஞர் அண்ணா சிலை மற்றும் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா வழியில் உழைத்து தமிழக மக்களுக்காக உழைத்த தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் சிலைகளை வைக்க கோருகிறார்.
4. 20வது வார்டில் குடிநீர் பிரச்சனை அதிகமாக உள்ளதால் ஒரு உயர்நீர்தேக்க டேங்க அமைத்து தருமாறு கோருகிறார்.
5. 20வது வார்டில் பழுதடைந்துள்ள மகளீர் கழிப்பிடத்தினை சரிசெய்து தருமாறு கோருகிறார்.
6. 20வது வார்டில் பழுதடைந்துள்ள சாலைகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்களை சரிசெய்து தருமாறு கோருகிறார்.
7. 20வது வார்டில் மக்கள் தொகை அதிகமாக உள்ளதால் வார்டில் ஒரு ரேஷன் கடை கட்டி தருமாறு கோருகிறார்.
8. 20வது வார்டில் உள்ள மக்கள் அனைவருக்கும் ஒனேக்கல் குடிநீர் கிடைக்க ஆவண செய்யுமாறு கோருகிறார்.
9. 20வது வார்டில் தெருமின்கம்பங்கள் இல்லாத இடத்தில் புதியதாக மின்கம்பங்கள் அமைத்து மின்விளக்குகள் பொருத்தி தருமாறு கோருகிறார்.
10. 20வது வார்டில் உள்ள பழுதடைந்துள்ள மின்மோட்டார் மற்றும் ஆழ்துளை கிணறுகளை சரிசெய்து தருமாறு கோருகிறார்.

தீர்மானம் எண் : 25

1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 ஆகிய பணிகள் குறித்து அறிவிக்கை மன்றத்தில் வைக்கவும்.

பொருள் எண்.26

<u>21வது வார்டு உறுப்பினர் திருமதி.நஜீஹா அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>

1. 21வது வார்டில் ரஷீதாபாத்-1,2,3, ஜாக்கீர் ஹஜ்ரத் மஸ்ஜித் வீதி , ஜாக்கீர் ஹஜ்ரத் மஸ்ஜித் வீதி சந்தில் கழிவுநீர் கால்வாய் இல்லாததால் கழிவுநீர் வீட்டுக்குள் நுழைந்துவிடுகிறது. இதனால் பொது மக்களுக்கு நோய் பரவும் என்பதால் சுமார் 350 மீட்டருக்கு புதியதாக கழிவு நீர்கால்வாய் அமைத்து தருமாறு கோருகிறார்.
2. 21வது வார்டில் ரஷீதாபாத்-3 வீதியில் குடிநீர் பைப்லைன் இல்லாததால் குடிநீர் விநியோகம் செய்ய வேண்டி புதியதாக குடிநீர் பைப்லைன் அமைத்து தருமாறு கோருகிறார்.
3. 21வார்டுகளில் உள்ள பொதுமக்கள் சொத்துவரி, குடிநீர் கட்டணம், குப்பைக்கான வரி செலுத்தி வருகின்றனர். இரசீதுகளில் ஏற்கனவே உள்ள பழைய வார்டு எண்கள், வீட்டு எண்கள் உள்ளதை புதிய வார்டு எண் மற்றும் வீட்டு எண்களை கணினியில் மாற்றி வழங்க கோருகிறார்.

தீர்மானம் எண் : 26

1, 2 பொறியாளர் பார்வையிட்டு அறிவிக்கை வைக்கவும்.

3 ஆணையாளர் மேற்கண்ட குறைகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளவும்.

பொருள் எண்.27

பேர்ணாம்பட்டு நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி மற்றும் மார்ச் 2022ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.500/2021/சி1

தீர்மானம் எண் : 27

. ''அங்கீகரிக்கப்படுகிறது''

பொருள் எண்.28

பேர்ணாம்பட்டு நகராட்சி பொறியாளர் அவர்களின் பிப்ரவரி மற்றும் மார்ச் 2022ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம்.

ந.க.எண்.500/2021/சி1

தீர்மானம் எண் : 28

. ''அங்கீகரிக்கப்படுகிறது''

பொருள் எண்.29

இந்நகராட்சியின் 2021-22ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீடு (REVISED BUDGET ESTIMATE) மற்றும் 2022-2023ம் ஆண்டின்

வரவு செலவு திட்ட மதிப்பீடு (BUGDET ESTIMATE) தயார் செய்து மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 314/2022/சி1

தீர்மானம் எண் : 29

. ''அங்கீகரிக்கப்படுகிறது''

பொருள் எண்.30

இந்நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்கள் 1) பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்கம் வசூல் செய்யும் உரிமம் மற்றும் 2) ஆடு, மாடு அடிக்கும் தொட்டியில் சுங்கம் வசூல் செய்யும் உரிமம் 31.03.2022 உடன் முடிவடைவதால், அதற்கான பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கடந்த 30.03.2022 அன்று கோரப்பட்டது. பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரி யாரும் முன்வரவில்லை. எனவே, குத்தகையினை உடன் ஒப்படைக்க குறுகிய கால பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி 08.04.2022அன்று வைக்கப்பட்டுள்ளது. மேற்படி, குத்தகை இனங்கள் குத்தகைதாரர்களிடம் ஒப்படைக்கும் வரை துறை மூலம் வசூல் பணியினை மேற்கொள்வதற்கும், அதற்கான இரசீதுகள் அச்சடிக்கவும் அதற்கான செலவு தொகைக்கும் மன்றத்தின் ஒப்புதலுக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மன்றப்பொருளில் தெரிவித்துள்ள குத்தகை இனங்களில் உயர்ந்தப்பட்ச ஏலக்கேள்விதாரர்/உயர்ந்தபட்ச ஒப்பந்த கேள்விதாரர் அவர்களிடம் ஒப்படைக்கும் காலம் வரை துறை மூலம் வசூல் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) துறை மூலம் வசூல் செய்வதற்கு இரசீதுகள் அச்சடிக்கவும் அதற்கான செலவுத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4/2022/அ1

தீர்மானம் எண் : 30

. ''அங்கீகரிக்கப்படுகிறது''

1. ஆடு மாடு அடிக்கும் தொட்டி சுங்கம் வசுல் ஏலம் 16 முறை தள்ளி வைக்கப்பட்டதால் டேவணித் தொகை குறைத்து மறு டெண்டர் கோரலாம்.
2. பேருந்து நிலையத்திர் வந்து செல்லும் பேருந்து சுங்க வ'சல் ஏற்க்னவே டெண்டர் எடுத்த நபருக்கு 2 மாதத்திற்கு டெண்டர் கொடுக்கலாம். மேலும் மற டெண்டர் உடனடியாக மேற்கொள்ளவும்.

பொருள் எண்.31

இந்நகராட்சியின் வரியினங்கள் சொத்துவரி, தொழில் வரி, குடிநீர் கட்டணம், குத்தகைகள் இனங்கள் மற்றும் உரிம கட்டணம் போன்றவைகளை செலுத்த கோரி உரிமையாளர்களின் அலைபேசிக்கு இணையதளம் குறுச்செய்தி அனுப்பும் வசதியினை MFM Services Provider என்ற நிறுவனத்தின் மூலம் பணிகளை

மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.50000/-த்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இணையதளம் குறுச்செய்தி அனுப்பும் வசதியினை மேற்கொள்ள ஆகும் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் : 31

. ''அங்கீகரிக்கப்படுகிறது''

பொருள் எண்.32

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரைத்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாகச் செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில் கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில்

கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

<u>**சொத்துவரி:**</u>

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601-1200 | 1.5 |
| 1201-1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non-Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25ரூ சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50ரூ சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75ரூ சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100ரூ சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100ரூ சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.
6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

<u>**காலிமனை வரி சீராய்வு:**</u>

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**<u>தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:</u>**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டுதோறும் 6 % உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் பேர்ணாம்பட்டு நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின்கட்டணம் | ரூ.1.61 கோடி |
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | ரூ.0.55 கோடி |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | ரூ.20.07 கோடி |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | ரூ.0.48 கோடி |
| **மொத்தம்** | | **ரூ.22.71 கோடி** |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81-A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், பேர்ணாம்பட்டு நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25ரூ சொத்துவரி உயர்வு செய்யலாம்.
2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.
4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75ரூ சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6 ரூ உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

தற்போது உள்ள தெருக்களின் மண்டலங்களின் விவரங்கள் கீழ்கண்டவாறு

| வ.எண் | வார்டு எண் | தெரு பெயர் | 2008 சொத்து வரி மறு சீராய்வு தற்போதைய மண்டலம் |
|---|---|---|---|
| 1 | 1 | கே.கே.நகர் | B |
| 2 | 1 | எம்.ஜி.ஆர்.நகர் | B |
| 3 | 1 | ஜெ.ஜெ.நகர் | B |
| | | | |
| 4 | 2 | ரகமானியா வீதி | A |
| 5 | 2 | இக்பால் வீதி | A |
| 6 | 2 | அஸ்ரப் வீதி | A |
| 7 | 2 | மரீத் மார்க்கெட் வீதி | A |
| 8 | 2 | பஜார் வீதி | A |
| 9 | 2 | குல்ஜார் வீதி – 1 | B |
| 10 | 2 | குல்ஜார் வீதி – 2 | B |
| 11 | 2 | குல்ஜார் வீதி – 3 | B |
| 12 | 2 | நூர் முகமது வீதி – 1 | B |
| 13 | 2 | நூர் முகமது வீதி – 2 | B |
| 14 | 2 | புது வீதி – 1 (14–25) | B |
| 15 | 2 | புது வீதி – 2 | B |
| 16 | 2 | புது வீதி – 3 | B |
| 17 | 2 | புது வீதி – 1 (1–13, 26–50) | C |
| | | | |
| 18 | 3 | ஆதம்ஸமா வீதி | B |
| 19 | 3 | மதனி வீதி | B |
| 20 | 3 | ஒத்தவாடை – 1 | C |
| 21 | 3 | ஒத்தவாடை – 2 | C |
| | | | |
| 22 | 4 | டீப்புசா வீதி 1–45, 58–112 | B |
| 23 | 4 | டீப்புசா வீதி 46–57 | B |
| 24 | 4 | லால் மஜித் வீதி 1–30, 70–71, 100–112 | B |
| 25 | 4 | லால் மஜித் வீதி 31–69, 79–99 | B |
| | | | |
| 26 | 5 | சார்மினார் வீதி | A |

| | | | |
|---|---|---|---|
| 27 | 5 | தோப்பு வீதி – 1 (1–27, 22/1–44) | B |
| 28 | 5 | தோப்பு வீதி – 1 (28–31) | C |
| 29 | 5 | தோப்பு வீதி – 2 | C |
| 30 | 5 | ஆமினா வீதி | B |
| 31 | 5 | ஆமினா வீதி சந்து | C |
| | | | |
| 32 | 6 | முகமது ரஜாக் வீதி | B |
| 33 | 6 | இனாம்தார் வீதி | B |
| 34 | 6 | சின்ன மஜித் வீதி | B |
| 35 | 6 | பட்டேல் வீதி | B |
| 36 | 6 | பட்டேல் வீதி சந்து | B |
| | | | |
| 37 | 7 | முல்லா வீதி | B |
| 38 | 7 | முல்லா வீதி சந்து | B |
| 39 | 7 | பெரிய மஜித் வீதி | B |
| 40 | 7 | அஜீஜியா வீதி | B |
| | | | |
| 41 | 8 | நுஸ்ரத் வீதி | B |
| 42 | 8 | பூந்தோட்ட வீதி | B |
| 43 | 8 | இதாயத் வீதி | B |
| 44 | 8 | தாஹுர் வீதி | B |
| 45 | 8 | உஸ்மன் வீதி | B |
| 46 | 8 | நல்ல தண்ணீர் கிணறு வீதி | C |
| | | | |
| 47 | 9 | வீராசாமி வீதி | A |
| 48 | 9 | கர்ணம் வீதி | A |
| 49 | 9 | பஜார் வீதி | A |
| 50 | 9 | சவுக் ரோடு–1 | A |
| 51 | 9 | காசிம் வீதி | A |
| 52 | 9 | சப்தார் வீதி | A |
| 53 | 9 | ஆச்சாரி வீதி | A |
| 54 | 9 | சுப்பைய்யா வீதி | A |
| 55 | 9 | ஜெயா வீதி | A |
| 56 | 9 | கெ.கோயில் வீதி | B |
| 57 | 9 | மேஸ்திரி வீதி | A |
| | | | |
| 58 | 10 | ஆயக்கார வீதி (1–61) | A |
| 59 | 10 | ஆயக்கார வீதி (62–88) | B |
| 60 | 10 | சேஷாத்திரி வீதி | B |
| 61 | 10 | பாகருசேன் வீதி – 1 (செக்குமேடு) | B |
| 62 | 10 | ஓங்குப்பம் ரோடு | B |
| | | | |
| 63 | 11 | ஷேக் மீரான் வீதி | C |
| 64 | 11 | ஹக்கீம் அப்துல் கையும் வீதி | C |
| 65 | 11 | ரஷிதாபாத் – 1 | C |
| 66 | 11 | ரஷிதாபாத் – 2 | C |
| 67 | 11 | ரஷிதாபாத் – 3 | C |
| 68 | 11 | ஓங்குப்பம் ரோடு | C |
| 69 | 11 | அருந்ததியர் காலணி | C |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 70 | 12 | ஆஸ்பத்திரி வீதி | B |
| 71 | 12 | சஞ்சீவி வீதி | B |
| 72 | 12 | புண்ணாக்கி வீதி | B |
| 73 | 12 | கோயில் வீதி | B |
| 74 | 12 | துலக்காணம் வீதி | B |
| 75 | 12 | பக்கீரான் வீதி | B |
| 76 | 12 | இராமன் வீதி | B |
| 77 | 12 | சித்தூரரான் வீதி | B |
| 78 | 12 | சவுக் ரோடு – 7 | B |
| 79 | 12 | சவுக் ரோடு – 8 | B |
| 80 | 12 | சவுக் ரோடு – 9 | B |
| | | | |
| 81 | 13 | பழைய ஆம்பூர் ரோடு | B |
| 82 | 13 | பாகருசேன் வீதி – 2 | B |
| 83 | 13 | பாகருசேன் வீதி – 3 | B |
| 84 | 13 | பாகருசேன் வீதி – 4 | B |
| | | | |
| 85 | 14 | சவுக்ரோடு – 1 | B |
| 86 | 14 | சவுக்ரோடு – 2 | B |
| 87 | 14 | சாலப்பேட்டை – 1 | B |
| 88 | 14 | சாலப்பேட்டை – 2 | B |
| 89 | 14 | சாலப்பேட்டை – 3 | B |
| 90 | 14 | சாலப்பேட்டை – 4 | B |
| 91 | 14 | சவுக்ரோடு – 3 | B |
| 92 | 14 | சவுக்ரோடு – 10 | B |
| 93 | 14 | சவுக்ரோடு – 11 | B |
| 94 | 14 | சவுக்ரோடு – 12 | B |
| 95 | 14 | சவுக்ரோடு – 13 | B |
| | | | |
| 96 | 15 | சேரன் வீதி – 1 | B |
| 97 | 15 | சேரன் வீதி – 2 | B |
| 98 | 15 | சோழன் வீதி | B |
| 99 | 15 | பாண்டியன் வீதி – 1 | B |
| 100 | 15 | சவுக் ரோடு | B |
| 101 | 15 | சவுக்ரோடு – 4 (பூங்கா வீதி) | B |
| 102 | 15 | காமராஜ் நகர் | B |
| | | | |
| 103 | 16 | பாண்டியன் வீதி – 2 | A |
| 104 | 16 | பாண்டியன் வீதி – 3 | A |
| 105 | 16 | பாண்டியன் வீதி – 4 | A |
| 106 | 16 | நியமத் வீதி – 2 | B |
| 107 | 16 | நியமத் வீதி – 3 | C |
| | | | |
| 108 | 17 | நியமத் வீதி – 1 | A |
| 109 | 17 | காஜி வீதி | A |
| 110 | 17 | ரகமதாபாத் – 1 | B |
| 111 | 17 | ரகமதாபாத் – 2 | B |
| 112 | 17 | ரகமதாபாத் – 3 | B |

| | | | |
|---|---|---|---|
| 113 | 17 | ரகமதாபாத் – 4 | B |
| | | | |
| 114 | 18 | வி.கோட்டா ரோடு (1–45) | A |
| 115 | 18 | வி.கோட்டா ரோடு (46–85) | A |
| 116 | 18 | சிவராஜ் நகர் (வி.கோ.ரோடு) (1–5) | A |
| 117 | 18 | சிவராஜ் நகர் (வி.கோ.ரோடு) (6–30) | B |
| 118 | 18 | சிவராஜ் நகர் (வி.கோ.ரோடு) (31–65) | C |
| 119 | 18 | குப்பைமேடு (ரகமதாபாத் மேடு) | C |
| 120 | 18 | எருக்கம்பட்டு ரோடு | C |
| | | | |
| 121 | 19 | சவுக் ரோடு – 1 | A |
| 122 | 19 | மதர்ஸா இஸ்லாமியா ரோடு – 1 | B |
| 123 | 19 | மதர்ஸா இஸ்லாமியா ரோடு – 2 | B |
| 124 | 19 | ரோட் மஜித் வீதி | B |
| 125 | 19 | மலங்கு வீதி | B |
| 126 | 19 | நவாலி வீதி | B |
| 127 | 19 | எர்த்தாங்கல் ஹக்கீம் வீதி – 1 | B |
| 128 | 19 | எர்த்தாங்கல் ஹக்கீம் வீதி – 2 | B |
| | | | |
| 129 | 20 | உம்மர் வீதி – 1 (1–55) | A |
| 130 | 20 | உம்மர் வீதி – 1 (56–62) | B |
| 131 | 20 | உம்மர் வீதி – 1 (63–82) | B |
| 132 | 20 | உம்மர் வீதி – 2 | C |
| 133 | 20 | சவுக் ரோடு – 5 | A |
| 134 | 20 | தாதா வீதி – 1 | B |
| 135 | 20 | தாதா வீதி – 2 | C |
| 136 | 20 | மௌலா வீதி – 1 | B |
| 137 | 20 | மௌலா வீதி – 2 | B |
| 138 | 20 | தீராமதி ஷாப் வீதி – 1 | B |
| 139 | 20 | தீராமதி ஷாப் வீதி – 2 | B |
| 140 | 20 | தீராமதி ஷாப் வீதி – 3 | B |
| | | | |
| 141 | 21 | முகமது அலி வீதி – 1 | B |
| 142 | 21 | முகமது அலி வீதி – 2 (1–42) | B |
| 143 | 21 | வி.கோட்டா ரோடு | B |
| 144 | 21 | முகமது அலி வீதி – 2 (43–82) | B |
| 145 | 21 | சவுக் ரோடு – 6 | B |
| 146 | 21 | புது ஷாப் லைன் (வி.கோ.ரோடு) | C |
| 147 | 21 | பாத்திமா வீதி | C |
| 148 | 21 | திவான் மஜித் வீதி | C |

**அலுவலககுறிப்பு.**

1) சொத்துவரி சீராய்வு தொடர்பாக ஏற்படும் செலவினத்தை நகராட்சியின் 2022–2023ம் ஆண்டின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**ந.க.எண்.241/2022/அ1**

தீர்மானம் எண் : 32

"அனுமதிக்கப்பட்டது"

மண்டலங்களுக்கு தொகை குறைப்பு குறித்து அடுத்த கூட்டத்தில் வைக்கவும்.

பொருள் எண்.33

சொத்துவரி, காலிமனைவரி பொதுசீராய்வு தொடர்பாக தமிழ்நாடு அரசால் பிறப்பிக்கப்பட்ட அரசாணை (நிலை) எண்.52, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள் 30.03.2022 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) சொத்து வரி சீராய்வு தொடர்பாக பொதுமக்களிடம் ஆட்சேபனை கோரும் அறிவிப்பினை செய்திதாளில் விளம்பரம் மேற்கொள்வதற்கு ஆகும் செலவினத்திற்கும், சொத்து வரி சீராய்வு தொடர்பான படிவங்கள் அச்சடிப்பதற்கு ஆகும் செலவனத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்
3) மேற்படி செலவினத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம் எண் : 33

''அங்கீகரிக்கப்படுகிறது''

பொருள் எண்.34

பேர்ணாம்பட்டு நகர பொதுமக்களால் கொண்டு வரும் தீர்மானம்.

பேர்ணாம்பட்டு நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 21வார்டு பகுதிகள், பஜார் பகுதி மற்றும் ஹைரோட்டில் உள்ள ஆக்கிரமிப்புகள் அதிகமாக உள்ளதால் பொது மக்கள் மற்றும் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளது. ஆகையால், நெடுஞ்சாலை துறை மற்றும் நகராட்சியின் மூலமாக ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு கோருகிறார்கள்.

தீர்மானம் எண் : 34

பஜார், ஹைரோடு மற்றும் நகர முக்கிய வீதிகளில் ஆக்கிரமிப்பு அகற்ற துப்புரவு ஆய்வர் மற்றும் காவல்துறை உதவியுடன் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

2. மமாநில நெடுஞ்சாலைத் துறைக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தி நடவடிக்கை மேறகொள்ளவும்.

பொருள் எண்.35

பேர்ணாம்பட்டு நகரத்தின் நுழைவாயிலில் (புற்றுகோயில்) அமைந்துள்ள இந்திய அரசியலமைப்பின் தந்தை, ஒதுக்கப்பட்ட மக்களின் தனிப்பெருந்தலைவர், பேர்ணாம்பட்டு தலீத் மக்களின் அடையாளம், பாரதரத்னா பாபாசாஹேப் டாக்டர்.B.R.அம்பேத்கர் அவர்களின் திருஉருவச்சிலை அமைந்துள்ளது. இரவு நேரத்தில் அந்த பகுதி இருள் சுழ்ந்து காணப்படுவதால் சமூகவிரோத செயல்களும், அடிக்கடி விபத்துகள் ஏற்படும் அபாயமும் உள்ளது. இரவு நேரத்தில் அபாயகரமாக இருக்கும் இந்த இடத்தை அழகாகவும், வெளிச்சம்

நிறைந்ததாகவும் மாற்றவும் டாக்டர்.B.R.அம்பேத்கர் அவர்களின் திருஉருவச்சிலைக்கு மின்விளக்கு வசதி செய்யப்பட்டிருப்பதால் நகராட்சி சார்பில் மின் இணைப்பு வழங்கவும் மின்கம்பம் அமைத்து, மின் விளக்குகளால் ஒளிரச்செய்யுமாறு தலைர், டாக்டர்.B.R.அம்பேத்கர் கல்வி மற்றும் சேவை அறக்கட்டளை சார்பாக அளித்துள்ள கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண் : 35

சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அனுமதி வழங்கலாம்.

நகர்மன்ற தலைவர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி.